விலை ரூபா 5/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் 53 | மார்கழி, தை - 2003 | பக்கங்கள் 12 | ஒளி 65

# யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு இயக்கத்தை கட்டி எழுப்புவதற்கு கூட்டுறவுக் கல்லூரியை நிறுவியவர் பெரியார் வீரசிங்கம்

## தேசிய கூட்டுறவு சபைத்தலைவர் லயனல் சமரசிங்க புகழாரம்.

இலங்கைக் கூட்டுறவு இயக்க வரலாற்றில் அமரர் வீரசிங்கத்தின் கூட்டுறவு சேவை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொரு நிகழ்வாகும் கூட்டுறவு இயக்கத்தினை யாழ்ப்பாணத்தில் வளர்த்தெடுப்பதற்கு கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தை உணர்ந்த பெரியார் வீரசிங்கம் யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்து அதனில் வெற்றி கண்டார்.

கூட்டுறவும் பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களின் 38 - வது நினைவு தினவிழாவில் முதல்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் லயனல் சமரசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுசபைத்தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் நினைவு தினம் கொண்டாடப்பட்டது.

கூட்டத்திற்கு முன்பதாக வீரசிங்கம் மண்டப முன்றலில் யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் மகளிர் பயிற்சியாளர்கள் கொடிக்கீதம் இசைக்க கூட்டுறவுக்கொடியை கூட்டுறவுக் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி ஏற்றிவைத்தார்.

கூட்டுறவுக்கீதத்துடன் ஆரம்பமான இவ்வைபவத்தில் இலங்கை தேசிய கூட்டுறவு சபைத்தலைவர் லயனல் சமரசிங்க தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது ;

அமரர் வீரசிங்கம் அவர்களின் 38 வது நினைவு தினக்கூட்டத்தில், அதுவும் புதுப்பொலிவுடன் விளங்கும் அவர் நாமத்தைத் தாங்கிய மண்டபத்தில்நின்று பேசுவதில்நான்மகிழ்ச்சி அடைகின்றேன்.'

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு சபையைப் பொறுத்தளவில் இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் செயற்படும் மாவட்ட கூட்டுறவு சபைகளிலும் பார்க்க சிறப்பான சேவையை ஆற்றி வருவதைப்பாராட்டாமல் இருக்க முடியாது.

(12-ம் பக்கம் பார்க்க)

உள்ளே, . .

- கனவுகள் கலைந்தபோது
- பொது அறிவு
- உருளைக்கிழங்கு பிறகூற்று
- முழுமையான சுகாதார
- தற்போதைய போட்டிப்
- வீரசிங்க நினைவு தின கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்ற கட்டுரைகள்.

# கனவுகள் கலைந்த போது . . .

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களின் நினைவுதின விழாவின் கலைநிகழ்ச்சியாக, நிறைவு நிகழ்ச்சியாக மேடையேற்றப்பட்ட நாடகமே கனவுகள் கலைந்தபோது இந்த நாடகம் பற்றிய நோக்கிற்கு முன்னதாக இந்த நாடகத்தை மேடையேற்றுவதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கிய அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினரை பாராட்ட வேண்டியது அவசியமானதே.

சமூகத்தில் இலைமறைகாயாக எத்தனையோ ஆற்றல்கள் மறைந்து காணப்படுகின்றது. சமூக பொருளாதாரத்தோடு கலை கலாச்சார மேம்பாடு என்பதையும் தனது நோக்காக கொண்ட கூட்டுறவு அமைப்புக்கள் தமது பிரதேச மக்களிடையே மறைந்துள்ள அல்லது வெளிக்கொண்டுவர வாய்ப்பற்ற நிலையில் உள்ள கலையம்சங்களை வெளிக்கொண்டுவரவும், அவற்றை வளர்க்கவும் ஊக்கம் அளிக்க வேண்டிய கடமைப்பாடுடையது இந்நோக்கில் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இம்முயற்சியானது ஏனைய கூட்டுறவு சங்கங்களிற்கு முன்மாதிரியாக அமைந்துள்ளது.

> கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களின் 38 வது நினைவு தின விழாவில் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வழங்கிய 'கனவுகள் கலந்த போது' — நாடக விமர்சனம் இங்கு பிரசுரமாகியுள்ளது.

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க மனைப்பொருளியல் பயிற்சியாளர்களால் நடிக்கப்பட்ட கனவுகள் கலைந்தபோது...! என்ற நாடகம் எமது சமூகத்தில் காணப்படும் பல அம்சங்களை உள்ளடக்கியது / ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாய ஆசிரியை லாவண்ஜா ஸ்ரீ சந்திரனின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்டது

பல கனவுகளோடு ஆண்பிள்ளைகளை சீராட்டி, பாராட்டி வளர்க்கும் எமது சமூகம் சில சந்தர்ப்பங்களில் அதே ஆண்பிள்ளைகளால் அல்லல்படுவதும் உண்டு. சீதனக் கொடுமை நிலைத்து விட்ட எமது சமூகத்தில் பெண்பிள்ளைகள் குடும்பங்களில் சுமையாகக் காணப்படுகின்றார்கள். அதேபோன்று வெளிநாட்டு மோகமும், வெளிநாடு சென்றதும் குடும்பப் பொறுப்பை மறந்து வாழும் பிள்ளைகளுக்கு படித்து உயர்பதவிக்கு வந்ததும் தம்மை கஷ்டப்பட்டு படிப்பித்த பெற்றோர்களை மறந்து தமது உல்லாச வாழ்வில் உலாவரும் பிள்ளைகளும் சமூகத்தில் இல்லாமல் இல்லை.

குடும்பப் பொறுப்பை தன் தலைமேல் சுமத்து தன் சகோதரர்களின் வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்த மூத்த மகன் சிவா பாத்திரம் நாடகத்தின் முதுகெலும்பாக அமைந்தது, பார்வதி பாத்திரம் மிகவும் பொருத்தமாகவே இருந்தது. கண்ணனும் காதல் ஜோடி ஜலஜாவும் கதையை மெருகூட்டினர். மஞ்சு நஞ்சுப் போத்தலுடன் வந்து ரசிகர்களை கண்கலங்க வைத்துவிட்டார். இடை இடையே மேடையில் தோன்றி சபையை சிரிக்க வைத்த அனுமந்து பாத்திரத்திற்கு எமது பாராட்டுக்கள்: சுப்புவும், மணியமும் உரையாடல் இயற்கையாகவே இருந்தது. நாடகத்தின்கதையை நெறிப்படுத்த இவ்வுரையாடல் பெரிதும் உதவியது எனலாம். இவர்களுக்கு சிறப்பான பாராட்டுக்கள்.

பர்வதம், கனகம்மா கலந்துரையாடல் மிகவும் கச்சிதம், சிவா பிரியா பாத்திரங்கள் விட்டுக்கொடுக்கவில்லை. மொத்தத்தில் நடிகர் குழு சிறப்பான ஆற்றலையை வெளிப்படுத்தியது நாடகத்தின் பல குறியீட்டு அம்சங்களும், பாடல்களும், ஆடல்களும் நாடகத்தை மெருகூட்டியது எனலாம். எனினும் குறையையும் சொல்லத்தான் வேணும். முருங்கக்காய் குழம்பையும், சோற்றையும் நடிப்பின் மூலம் மேடைக்கு கொண்டு வந்திருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும்,

எனினும் அவர்களது கன்னி முயற்சி இத்தனை உயர்ச்சி உடையதாக இருந்தமை பாராட்டக்கூடியது. நாடகத்தை நெறிப்படுத்திய ஆசிரியைக்கும், நாடக குழுவினருக்கும், அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினருக்கும் நன்றிகள்.

( 11 - ம் பக்கம் பார்க்க )

## கூட்டுறவாளர் இதயத்தில் வேரூன்றிய பெரியார் வீரசிங்கம்.

கூட்டுறவாளர் இயத்தில் பல பெரியார்கள் நிலைத்திருக்கின்ற போதும் பெரியார் வீரசிங்கம் கூட்டுறவாளர் இதயத்தில் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளார்.

> அமரர் வீரசிங்கம் அவர்களின் 38 - வது நினைவு தினத்தை ஒட்டி நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் கீழ்ப் பிரிவில் 1-ம் இடம் பெற்ற கட்டுரை இங்கு பிரசுரமாகியுள்ளது.

சிவலோகநாதன் தவசிலன்
சாவகச்சேரி இந்துக்கல்லூரி

இங்கிலாந்தில் திரு. ராபர்ட் ஓவனால் தொடக்கி வைக்கப்பட்ட கூட்டுறவு இயக்கமானது உலக இயக்கமாக வளர்ந்து இலங்கையில் தன் கால்களை பதித்து அந்தவேளையில் யாழ்ப்பாணக் கூட்டுறவின் உதயசூரியனாய் எழுந்தவர் வீரசிங்கம் ஆவர்.

இவரும், சில கூட்டுறவாளர்களும் இணைந்து "நாம் தூங்கிக் கொண்டிருக்காமல் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும்" என்று வலியுறுத்தி தமிழ் மக்களை விழித்தெழச் செய்ததன் உயர்ந்த பங்கு பெரியார் வீரசிங்கத்திற்கே உரியது.

ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் என்றும் கூட்டுறவு தத்துவத்தினை யாழ் மக்களிடையே பரப்பிய வீரசிங்கத்தை பின்பற்றி பல கூட்டுறவாளர்கள் அந்நெறியில் மக்களை சீர்படுத்திக் கொண்டு சென்றனர் என்றால் அது மிகையாகாது.

இவரின் உண்மையான கூட்டுறவுத் தத்துவமாக கூட்டுறவாளர்கள், கூட்டுறவு அங்கத்தவர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள் என்போர் தொழிற் துறையில் காட்டும் விசுவாசம், நேர்மை, சேவை ஒழுங்கு என்பவை தான் இவரது உண்மைத் தத்துவம் என குறிப்பிடப்பட்டு ளன.

(11 - ம் பக்கம் பார்க்க )

# பொது அறிவு

## GENERAL KNOWLEDGE

- 1859 சிவில் மருத்துவத் திணைக்களம் நிறுவப்பட்டமை,
- 1864 கொழும்பு பொது வைத்தியசாலை நிறுவப்பட்டமை.
- 1879 டீ சொய்சா மகப்பேற்று வைத்திய சாலை நிறுவப்பட்டமை
- 1910 லேடி றிஜ்வே நினைவு வைத்திய சாலை நிறுவப்பட்டமை
- 1913 சுகாதாரத் திணைக்களம் அமைக் கப்பட்டமை
- 1926 மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் பணியாளரின் கீழ் சிகிச்சை, மற்றும் தடுப்புப் பணிகளை இணைத்தமை
- 1931 மருத்துவப் பணிகள் மற்றும் பொதுநலம் ஆகியவற்றுக்குப் பொறுப் பான அமைச்சர் ஒருவரை நியமித்தமை
- 1950 காசில் வீதி மகப்பேற்று வைத்திய சாலை திறக்கப்பட்டமை
- 1952 தேசிய மருத்துவப்பணிகள் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை
- 1953 குடும்பத் திட்டமிடல் அமைப்பை நிறுவியமை
- 1955 நலப்பணிச் சபையினை மதியுரைக் குழு ஒன்றாக நிறுவியமை
- 1961 ஆயுர்வேத மருத்துவசபை நிறுவி யமை
- 1964 அரச வைத்தியர்களின் தனிப்பட்ட சிகிச்சை முறை தடைசெய்யப்பட்டமை
- 1966 நலத் திணைக்களம் நல அமைச் சுடன் இணைக்கப்பட்டமை
- 1970 குடும்ப நலப் பணியகம் நிறுவப்பட் டமை
- 1971 அரசமருந்தாக்கல் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டமை
- 1972 நலக் கல்விப் பணியகம் நிறுவப் பட்டமை
- 1978 அல்மா - ஏரிஏ மாநாடு ஆரம்ப நலக்கவனிப்பு அணுகுமுறையினை ஏற் றுக்கொண்டமை. மருந்துகளின் இறக்கு மதி தாராளமாக்கப்பட்டமை
- 1979 சிறி ஜயவர்த்தனபுர போதனா வைத்தியசாலை நிறுவப்பட்டமை

## கண்ணி வெடிகளை மோப்பம் பிடிக்கும் தேனீக்கள்

உலகெங்கும் 110 மில்லியன் கண்ணிவெடி கள் புதைக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடு கள் சபை அறிவித்துள்ளது.

இக்கண்ணிவெடிகளினால்வருடந்தோறும் உயிரிழந்தும், படுகாயங்களுக்கும் உள்ளா னோரின் தொகை சர்வதேச ரீதியாக 26000 ஆயிரம் எனவும் ஐக்கியநாடுகள் சபையினால் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு ''தேனீக்களை'' ஈடுபடுத் தலாம் என அமெரிக்காவின் மொண்டானா பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழுவினர் ஆய்வு களின் மூலம் கண்டுபிடித்துள்ளனர்,

இந்த ஆராய்ச்சிக் குழுவின் தலைவரான பேராசிரியர் ஜேரி புரோமன்செனக் என்ப வர், கண்ணிவெடிகளைக் கண்டறிவதில் மோப்பநாய்களை விடதேனீக்கள் சிறப்பாக ஈடுபடும் எனக் கண்டறிந்துள்ளார்.

இத் தேனீக்கள் மோப்பநாய்களை விட வேகமாகவும், மிகவும் நுணுக்கமாகவும் செயற்படக்கூடிய வல்லமை வாய்ந்தமை என பேராசிரியர் ஜேரி கூறியுள்ளார்.

## சிந்தனைக்கு சில போதனைகள்

- பேசுவதற்கு முன்னர் கேள்! எழுதுவதற்கு முன் சிந்தனை செய்!
- செலவு செய்வதற்கு முன் சம்பாதி! கோபப்பட முன் அறி!
- பிறரைப் புரிந்து கொள்ளமுன் உன்னைப் புரிந்து கொள்!
- விழுவதற்கு முன் எழுந்துவிட முயற்சி செய்! அது காயங்களில் இருந்து உன்னைத் தப்பவைக்கும்.
- உன் வீட்டு விளக்கால் அடுத்த வீட்டுக் காரன் ஒளி பெறக்கூடாது என்பதற்காக கொளுத்திய விளக்கை கூரைக்குள் மறைக்காதே.
- மற்றவர் சிரிக்க வேண்டும் என்பதற்காக நீ சிரித்து வாழ்.

தொகுப்பு :
செல்வி : வைத்திலிங்கம் பிரபா

மண்வளம்

# உருளைக்கிழங்கு பிற்கூற்று நோய்வெளிறல்

நோய்க் காரணிகளான நுண் அங்கிகள் அல்லது புறச் சூழ்நிலைக் காரணிகளினால் தாவரங்களில் நோய்ஏற்படுகின்றது தொடர்ச்சியான கண்ணுக்குத் தெரிவதும்; தெரியாததுமான மாற்றங்களின் விளைவாக தாவரங்களில் முழுமையாக அல்லது பகுதியாக ஏற்படுத்தப்படும் பாதகமான விளைவுகளினால் நோய் ஏற்படுகின்றது.

எமது தேவைகளுக்கு நாம் தாவரங்களில் தங்கியிருப்பதால், தாவர நோய்கள் எமக்கு மிக முக்கியமானவையாக விளங்குகின்றன. மனித வரலாற்றில் பலமோசமான பட்டினியையும், பஞ்சத்தையும் ஏற்படுத்துவதில் தாவர நோய்கள் முக்கிய பங்காற்றி வந்துள்ளன. நோயுற்ற தாவரப் பாகங்களை உண்பதனால் மனிதர்களும் விலங்குகளும் பாதிக்கப்படலாம். நோய்களின் காரணமாக உற்பத்தி குறைவதால் விவசாயிகள் நட்டத்தை எதிர்நோக்குவதோடு, பாவனையாளர்களும் அதிகவிலையை செலுத்த வேண்டியுள்ளது உருளைக் கிழங்கில் தாவர நோய்களினால் 21.8% உற்பத்தி பாதிக்கப்படுகின்றது எனவே, இந்நோய்களைக் கவனமாகக் கட்டுப்படுத்துவதன் மூல சிறந்த பயனைப் பெறலாம்.

## பூஞ்சண நோய்கள்

### பிற்கூற்று வெளிறல் நோய்

இது உருளைக்கிழங்கில் ஏற்படும் பூஞ்சண நோயாகும். இந்நோயானது முதன் முதலில் 1840ம் ஆண்டு வட

ரால் இந்நோயானது பைற்றோப்தெரா ன்பெஸ்டன்ஸ் (*P infestans*) என்னும் பூஞ்சணத்தால் ஏற்படுத்தப் படுகின்றது என சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டது

குளிருடன்கூடிய ஈரப்பதனுடைய காலநிலை உள்ள பிரதேசங்களில் இதன் தாக்கம் மிக அதிகமாக இருப்பதுடன், தக்காளி போன்ற சொலனேசியே குடும்பத் தாவரங்களையும் தாக்கும் வல்லமை கொண்டது.

வளர்ச்சிக் காலத்தின்எந்தப்பகுதியிலும் தாவரத்தின் இலையையும், தண்டுப் பகுதியையும் தாக்க வல்ல இந்நோய் நிலத்தின் கீழ் உண்டாகும் கிழங்குகளையும் தாக்கும்திறன் உடையதாகும். இரண்டொரு வாரங்களில் இந்நோயானது, முழுப்பயிரையும் அழித்து விடும். சில சமயங்களில் இந் நோய்த் தாக்கம் குறைவாக இருப்பினும், அறுவடையின் போது கிழங்கைத் தாக்கி, களஞ்சியப்படுத்தலின் போது கிழங்கை அழுகச் செய்கின்றது.

## நோய் அறிகுறிகள்

முதன் முதலில் கீழ்ப்பகுதியில் உள்ள இலைகளின் ஓரத்தில் நீர்ப் புள்ளிகள் உருவாவதைக் காணலாம். இவ்வாறான புள்ளிகள் குளிரான காலநிலைகளின் கீழ் மிக விரைவாகப் பெரிதாகி, கபில நிறமான, நிரந்தர எல்லைகளற்ற வெளிறல் அடையாளங்களைத் தோற்றுவிக்கும், புள்ளிகளின் பின் புறத்தில் 3.5 மி.மீ வரையான வெள்ளை நிறமான பூஞ்சண வளர்ச்சியை அவதானிக்க முடி

இந்நோயினால் தாக்கப்பட்ட கிழங்குகள் முதலில் ஊதா அல்லது கபில நிறமான புள்ளிகளைக் கொண்டிருப்பதுடன் கறுப்பு நிறமான, செவப்புக் கலந்த கபில நிற நீரில் நனைந்த தோற்றமுடைய (*Water Soaked*) இழையங்கள் 5-10 மி.மீ ஆழத்திற்கு கிழங்கின் உட்பகுதிக்கு ஊடுருவி இருப்பதைக் காணலாம். இவ்வகையான அறிகுறிகள் செவப்பு நிற தோல் உடைய கிழங்கு வகைகளில் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கும். இவ்வாறு நோயினால் தாக்கப்பட்ட பகுதிகள் கட்டியாவதுடன் சிறு குழி போன்ற தோற்றத்தையும் ஏற்படுத்தும், இவ்வகையான காயங்கள் சிலவேளைகளில் கிழங்கின் முழு மேற்பரப்பிலும் அவதானிக்க முடிவதுடன், இவை கிழங்கின் உட்புறப் பகுதியைத் தாக்குவதில்லை ஆனால் களஞ்சியப்படுத்தப்படும் போது அழுகல் தொடர்வதற்கு இடமுண்டு.

## நோய்க் கட்டுப்பாடு :-

சுகாதார முறைகளைக் கடைப்பித்தல் மூலமும், எதிர்ப்புத்திறன் உள்ள வர்க்கங்களை செய்கை பண்ணல் மூலமும் சரியான நேரத்தில் பங்கசு நாசினிகளை விசிறுதல் என்பவற்றின் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியும். நோயில்லாத விதைக் கிழங்கைத் தெரிவு செய்தல், தோட்டங்களில் பிடுங்கி வீசப்பட்ட இலைப் பகுதியை எரித்து விடுதல், தானாக முளைக்கும் பயிர்களைத் தோட்டப் பகுதிகளில் இருந்து அழித்து விடுதல் என்பவற்றின் மூலம் இந்நோயை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தமுடியும்.

மிக அதிக எதிர்ப்புத்திறன் உள்ள வர்க்கமானவற்றை பயிரிடுவதன்மூலம் இந்நோயைக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடியும், ஆனால், எமது நாட்டில் கிடைக்கக்கூடிய பிரமான வர்க்கங்களாவும் இந்நோய்க்கு எதிர்ப்புத் திறன் அற்றவையாகக் காணப்படுகின்றன. இருந்தாலும், ராஜ (*Raja*) எஸ்கோட் (*Escort*) மரனகா (*Maranca*) போன்ற வர்க்

## முழுமையான சுகாதார வழிமுறைகளை

# பேணிவரின் கண்நோய் ஏற்படுவதைத் தடுக்கலாம்!

இப்பொழுது பரவிவரும் கண் நோய் Conjuntivitis எனப்படுவதாகும், இது விழியின் வெண்விழிப் படலத்தையே தாக்குவதால் வெண் விழி அழற்சி எனத் தமிழில் கூறலாம்

வெண்விழி அழற்சி எனப்படும் இக்கண்நோய் வைரஸ் கிருமிகளால் அல்லது பக்டீரியாக் கிருமிகளால் ஏற்படுகின்றன. சில வேளைகளில் ஒவ்வாமை என்று சொல்லப்படும் அழற்சியாலும் வரலாம். இக்கண் நோய் இப்பொழுது இலங்கைபூராவுமே மிக வேகமாகப் பரவிவருகின்றது. இவ்வாறு காலத்திற்குக் காலம் பரவுவதுண்டு. இது வைரஸ் கிருமியாலேயே பரவிவருகிறது.

## சுகவளம்

வைரஸ் கிருமியால் ஏற்படும் இந் நோயில் கண்ணில் இருந்து வடியும் திரவம் நீர் போன்ற தன்மையைக் கொண்டிருக்கும். ஆனால் பக்டீரியா கிருமியால் ஏற்பட்டால் கண்ணிலிருந்து சுரக்கும் திரவம் தடிப்பான சீழ் போன்ற பீளையாக வடியும் ஒவ்வாமையால் ஏற்படும்கண்நோயில் தடிப்பான எச்சில் போன்ற திரவம் வடியும்.

இப்பொழுது வேகமாகப் பரவி வரும் கண்நோய் வைரஸ்கிருமிகளால் வருகிறது என்பதால் அவற்றிற்கு மருந்து ஏதும் கிடையாது. என்றாலும் நோயுற்று இருக்கும் கண்ணில் பக்டீரியா கிருமிகளும் சுலபமாகத் தொற்றிவிடும் வாய்ப்பு இருப்பதினால், அதனைத் தடுப்பதற்காக குளோரமபெனிக்கோல் ( Chloremphenicol ) போன்ற நுண்ணுயிர் கொல்லி கண் களிம்பு மருந்துகளை வைத்தியர்கள் சிபாரிசு செய்கிறார்கள்.

பாடசாலைகள் பாடசாலைவிடுதிகள், சிறைச்சாலை, தடுப்பு முகாம்கள், ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு, மக்கள் நெருக்கமாக பிரயாணம்செய்யும் பஸ்கள் போன்ற இடங்களில் இந்த நோய் வேகமாகத் தொற்றுகிறது.

### அறிகுறிகள்

ஆரம்பத்தில் கண்ணின் மேல்மடலின்கீழ் ஏதோ உறுத்துவதுபோன்ற உணர்வு ஏற்படும். பின் கண்ணிலிருந்து கடுமையாக நீர் வடிய ஆரம்பிக்கும். காலையில் கண் விழிக்கும் போது கண் இமைகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டிருக்கும் கண்கள் கடுமையாகச் சிவப்பதுடன் இமைகளும் வீங்கியிருக்கும் அத்துடன் காதுக்கு முன் சிறிய நிணநீர்க்கட்டி (நெறி) நோவுடன் தெரிய வரும்; பெரும் பாலானவர்களுக்கு நூற்றில் ஐம்பது பேருக்கு இரண்டாவது கண்ணிற்கும் நோய் பரவிவிடும்.

கண்நோய்விரைவாக பரவுவதற்குக் காரணம் என்னவென்றால் நோய்க்கிருமிகள் நோயாளியின் கண் விழிகளில் மாத்திரமின்றி நாசியிலும் தொண்டையிலுங்கூட காணப்படுவதுதான். இதனால் கண்நோய் நோயாளியிடமிருந்து நேரடியாக தொற்றுவதுமாத்திரமின்றி, நோயாளிதும்மும் போதும் இருமும் போதுங்கூட மற்றவர்களுக்குத் தொற்றலாம்,

### தடுப்பது எப்படி ?

கடைசியாக இந்நோய் தொற்றுவதைத் தடுப்பது எப்படி ?

1. நோயுற்றவர்களுடன் நெருங்கிப் பழகாதிருத்தல்
2. நோயுற்றவர் பிரயாணம் செய்யும் பஸ்களிலும் கார்களிலும் பிரயாணம் செய்வதைத் தவிருங்கள். முக்கியமாக காற்றோட்டம் அற்ற குளிரூட்டப்பட்ட வாகனங்களில் நோய்வந்தவர்களுடன் பிரயாணம் செய்தல் நோய் பரவுவதற்கான வாய்ப்பு மிக அதிகமாகும்.
3. வீட்டில் யாருக்காவது கண்நோய் வந்துவிட்டால் அவரைத் தனிமைப் படுத்திவையுங்கள்.
4. நோயுற்றவர் உபயோகித்த துவாய் கைக்குட்டை தலையணை போன்றவற்றை மற்றவர்கள் உபயோகிக்க கூடாது
5. கண்நோய் வந்தவர் தும்மும்போது இருமும்போதும் கைக்குட்டையால் வாயையும் மூக்கையும் மூடிக் கொள்ளவேண்டும்.
6. நோயுற்றவர் அடிக்கடி தனது முகத்தை இளஞ்சூட்டு நீரினால் கழுவ வேண்டும். கைகளையும் அடிக்கடி கழுவுவதுடன் உபயோகித்த கைக்குட்டை துணிகளையும் சோப்போட்டு துவைக்க வேண்டும்.
7. கண்நோய் வந்தவர் பாடசாலைக்கோ, வேலைத்தலத்துக்கோ போகாமல் வீட்டில் தங்கியிருப்பது நல்லது

பொதுவாகக் கண்நோய் ஒருவார மளவில் குணமாகிவிடும்.

ஆனால் வெளிச்சத்தைப் பார்க்கக் கடும் கூச்சம் இருந்தால் அல்லது கண் கருவிழியில் வெள்ளை நிறப் புள்ளிகள் தென்பட்டால் உடனடியாக கண் வைத்தியரை அணுகுங்கள்

இக்கண்நோயை முழுமையாகக் கட்டுப்படுத்தாது இருந்தால் முழுமையான சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

### பேசாத குழந்தை :

குழந்தைகள் பேச ஆரம்பிக்கும் வயதில் பலவேறுபாடுகள் உள்ளன. குழந்தைஒருவயதில்பேசத்தொடங்கும் இரண்டு வயதில் பேசத்தொடங்கும் குழந்தையை விட எந்த விதத்திலும் குறைந்த அறிவுடையது அல்ல.

ஒரு சராசரிக்குழந்தை தனது இரண்டு வயதில் சுமார். 20 சொற்களைத் தெரிந்து வைத்திருக்கும். இவைகளைத் தினமும் பயன்படுத்தும் குழந்தை இதைச்செய்யாவிட்டால் அக்குழந்தைக்கு கற்பதற்கு, புரிந்து கொள்வதற்கு, தொடர்பு கொள்வதற்குத் திறமை இல்லை எனக்கருதக் கூடாது.

குழந்தைகளுடன் அதிகநேரத்தை செலவிடுங்கள். அவனுடன் அடிக்கடி பேசுங்கள். வழவழப்பாக பேசாமல் தேர்ந்தெடுத்த சொற்களை அடிக்கடி பயன்படுத்துங்கள். குழந்தைகள்விரைவிலேயே பேசப்பழகி விடுவார்கள்.

அவனது காது, கேட்கும் திறன் நன்றாக இருக்கிறதா என்பதைக் கவனியுங்கள்.

குழந்தை 2 வயதிற்கு மேலும் ஒரு வார்த்தையும் பேசாது விட்டால் வைத்தியரை நாட வேண்டும்.

- நன்றி நீங்கள் நலமாக

# தற்போதைய போட்டிப் பொருளாதாரச் சூழ்நிலையில் கூட்டுறவு ஆற்றவேண்டிய பங்கு

கூட்டுறவின் தோற்றம் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டது. வர்த்தக முதலாளித்துவம், விவசாயப் புரட்சி என்பவற்றினால் ஏற்பட்ட மிகையைக் கொண்டு கைத்தொழில் முதலாளித்துவம் வளர்ச்சி கண்டது. கைத்தொழில் வளர்ச்சிக் கால கட்டத்தில் தொழிலாளர்கள் அளவொணா துன்ப துயரங்களைச் சுமந்து கொண்டு தொழிற்சாலைகளில் அடிமைகளாக வேலை செய்தனர். இந்த தொழிலாளர்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை கூட நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தொழிலாளர்கள் வெகுவாகச் சுரண்டப்பட்டனர். இத்தகைய ஒரு பின் புலத்திலேயே 1844 இல் பெரிய பிரித்தானியாவில் றொச்டேல் முன்னோடிகள் சங்கம் என்ற பெயருடன் உருவாக்கப்பட்ட சங்கத்தினை அடியொற்றி வளர்ந்ததே இன்றைய கூட்டுறவு முறையாகும்.

கூட்டுறவு என்பது சுய விருப்பின் அடிப்படையில் அதனுடைய சேவையை நுகர்கின்ற அங்கத்தவர்களினால் சொந்தம் கொண்டாடப் படுகின்ற ஒரு அமைப்பே கூட்டுறவாகும். கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்ப வடிவமைப்பாளர்கள் மிக உன்னதமான ஏழு தத்துவங்களை முன்வைத்தனர். இந்த ஏழு தத்துவங்களும் கூட்டுறவின் இயக்கத்திற்கும் நிலைநிறுத்தத்திற்கும் அத்தியாவசியமாகும்.

☆ கட்டுப்பாடில்லாததும் சுய விருப்பின் அடிப்படையிலான அங்கத்துவம்-உள்ளூர் மட்டத்தில் உள்ள நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்படுவதால் முறிந்து போகும் விதம் மிகவும் குறைவாகும்.

☆ ஜனநாயக ரீதியான அங்கத்துவ கட்டுப்பாடுகள் - எத்தனை பங்குகள் வைத்திருந்த போதும் ஒருவருக்கு ஒரு வாக்கு மட்டுமே.

☆ பங்குகளுக்கு வரையறையான வட்டி, பங்கு லாபம் - அங்கத்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் அங்கத்தவர்கள் நிறுவனத்தோடு செய்து கொண்ட வியாபாரத்திற்கு விகித சமமாகத் மிகையைப் பங்கிடல்.

☆ சுதந்திரமானதும் கட்டுப்பாடற்றதும் - அங்கத்தவர்களால் மட்டுமே கட்டுப்படுத்தப்படும்.

☆ அங்கத்தவர்களுக்குகல்வி, பயிற்சி தகவல் பரிமாற்றம், அங்கத்தவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும், தொழில் திறன் வளர்ச்சிக்கும், தகவல் பரிமாற்றத்திற்கும் உழைத்தல்.

☆ கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையில் கூட்டுறவு - இந்த தத்துவத்தினால் இன்று உலகளாவிய ரீதியில் ஒரு வலைப்பின்னலைக் கொண்டுள்ளது. சமூகத்தைப் பற்றிய அக்கறை - சமூகத்தில் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்காகச் செயற்படல்.


இ. நந்தகுமாரன்
*B. A. (Hons), M. A. M. Sc*
பீடாதிபதி, வியாபாரகற்கைகள்பீடம்
வவுனியா.


☆ 19 ஆம் நூற்றாண்டில் நிலவிய பொருளாதாரச் சூழ்நிலையில் கூட்டுறவுச் சங்கங்களின் அவசியம் உணரப்பட்டு எல்லா நாடுகளிலும் பெரிய வரவேற்பைப் பெற்றதுடன் விரைவாகவும் வளர்ச்சிகண்டது ஐரோப்பாவில் அமெரிக்காவில், இலத்தீன் அமெரிக்காவில், ஆபிரிக்காவில், ஆசியாவில் என்று எல்லாக் கண்டங்களிலும் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாகவும் செயல்பட்டன. தன்னலம் கருதாத அங்கத்தவர்களது உழைப்பினாலும், நல்ல முகாமைத்துவத்தினாலும் பொது மக்களுக்கு நல்ல சேவையை ஆற்றி நன்மதிப்பைப் பெற்றன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலக அரசியலில் மாபெரும் மாற்றங்கள் இடம்பெறலாயிற்று: இரு வேறுபட்ட பொருளாதாரத் தத்துவங்களைப் பின்பற்றி வந்த இரு தலைமைத்துவ நாடுகளின் பின்னால் உலக நாடுகள் அணிதிரண்டு ஒரு புறம் சந்தைப் பொருளாதாரங்கள் மற்றொருபுறம் சமூக நலன் கருதிய சோஷலிச சித்தாந்தங்களில் ஊறிய சமூக சம உடைமைப் பொருளாதாரங்கள் காணப்பட்டன. இவ்விரண்டு பொருளாதார முறைகளிலும் கூட்டுறவுகள் வளர்ந்தன. சம உடைமைப் பொருளாதாரங்களில் தேவைக்கேற்ப மாற்றங்களை உள்வாங்கி செயற்பட்டு வந்தன.

ஆனால் 1980 களில் சோஷலிச ரஷ்சியாவில் ஏற்பட்ட மாற்றம் உலகப் பொருளாதார அரங்கில் எல்லா நாடுகளிலும் தனியார் மயப்படுத்தல், சுதந்திரமான வர்த்தகம், அரச தலையீட்டை குறைத்தல், உலக மயமாதல் என்ற தாரக மந்திரங்கள் உச்சாடனம் பண்ணும் நிலை ஏற்பட்டது இந்தக் கொள்கைகளின் வெற்றி பற்றி சர்வதேச அமைப்புக்கள் விதம் விதமான புள்ளி விபரங்களை அள்ளி வீசிய போதும் ஒவ்வொரு நாட்டிலும் நலிந்த ஒரு சாரார் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையையும் நாம் மறந்து விடலாகாது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள உரிமையுடையவர்கள், கட்டுப்பாடுகளை நீக்குதல் மூலம் அரசு ஆக்குறைந்த சமத்துவத்தை உறுதிப்படுத்தும் பொறுப்பை விட்டு அகல முடியாது இதனால் அரசு கூட்டுறவுக்கு ஆற்றி வந்த பங்களிப்பை உடனடியாக நிறுத்தி விட முடியாது. அவ்வாறு விலக்குவதாயின் திட்டமிட்டு படிப்படியாகச் செயற்படல் வேண்டும். இல்லையேல் பாரிய பொருளாதார விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

இன்று கூட்டுறவு அமைப்புக்கள் எதிர்நோக்கும் மாபெரும் சவால் எவ்வாறு அதிகரித்துவரும் போட்டியினை எதிர்கொள்வது என்பதாகும். இந்தச் சவாலை ஏற்று மாற்றங்களை அறிமுகப்படுத்த பின்வாங்கினால் கூட்டுறவு அழிந்து போகும் என்பது உறுதி இந்த மாற்றங்கள் முகாமைத்

( 7-ம் பக்கம் பார்க்க )

துவத்தில் இருந்தோ அரசாங்கத்திடமிருந்தோ அல்லது அங்கத்தவர்களிடத்தில் இருந்து வரக்கூடிய சாத்தியக்கூறுகள் அரிதாகவே காணப்படுகின்றது. கடும் உழைப்பும் அர்ப்பணிப்பும் தான் மிகவும் அவசியம். போட்டிகளை சந்திக்கத் தவறின் கூட்டுறவு அமைப்புக்கள் நலிவடையும். இதனால் இதில் தொங்கிக் கொண்டிருந்த பெருச்சாளிகளுக்கு இதன் மீது இருந்த கவர்ச்சி குறையும். எனவே மீண்டும் தியாக சிந்தையும் அர்ப்பணிப்பும் உள்ளவர்களின் சேவையில் வளரக்கூடிய வாய்ப்பு உண்டு. இது கால ஓட்டத்தில் இயல்பாக நடைபெறக்கூடியது மீண்டும் புத்துயிர் பெற்று வரும்போது காலத்தின் தேவைக்கேற்றவாறு புதிய பரிமாணங்களைக் கொண்டதாக உருவாகும்.

நான் முன்னர் குறிப்பிட்டது போல உலகமயமாதல், போட்டிச் சந்தை என்பன சமூகத்தின் எல்லாவித பிரச்சனைக்கும் தீர்வாக ஒரு சிலரால் கருதப்படுகின்றது. ஆனால் உண்மையாகவே திறந்த பொருளாதாரம் நாடுகளுக்கிடையில் ஊழியர்களுக்கிடையே வர்த்தகத்திற்கிடையில் இருந்த சமநிலையைக் குலைத்துவிட்டது மற்றொரு சாரார் உலகமயமாதல் நலிந்த சிறிய நாடுகள் மீது வலிய செல்வந்த நாடுகள் தமது கட்டுப்பாடுகளையும் ஆதிக்கத்தையும் செலுத்த பின்பற்றும் ஒரு தந்திரோபாயமே உலகமயமாதல் என்று நம்புகின்றனர். போட்டிப் பொருளாதாரம், திறந்த வர்த்தகம் உலகமயப்படுத்தல் என்பவற்றின் பல்வேறு சாதனங்கள் மத்தியில் உலக சனத்தொகையில் நான்கின் ஒரு பங்கினர் நாளொன்றிற்கு ஒரு டொலர் வருமானத்தில் வாழ்கின்றார்கள். செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்குமிடையிலான வருமானச் சமமின்மை பல மடங்கு அதிகரித்துள்ளது, வேலையின்மை உலகின் பல நாடுகளிலும் உயர்ந்துள்ளது. வேலை செய்யும் சிறார்களின் எண்ணிக்கை 120 மில்லியனைத் தாண்டிவிட்டது, மனித உரிமைகள் மதிக்கப்படுவதில்லை. எனவே, பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டபோதும் அது சமமாகப் பரவவில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்த ஒரு பின்னணியிலேயே உலக தொழிலாளர் அமைப்பு மதிக்கத்தக்க வேலை ( Decent Work ) என்ற ஒரு எண்ணக் கருவை முன் வைத்துள்ளது. சுதந்திரமானதும், சமத்துவமானதும், பாதுகாப்பானதும், மனித மகிமையுடையதுமான சூழ்நிலை, ஆண்கள் பெண்கள் இரு சாராருக்கும் உற்பத்தியை மேம்படுத்தக்கூடியதும் மதிக்கத் தக்கதுமான வாய்ப்புக்களைமேம்படுத்தலையேஇவ் எண்ணக்கருவிளங்குகிறது.புதிய உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரங்கள் சகலருக்கும் வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்க்கையே பலர் மத்தியிலும் காணப்படுகிறது.

கூட்டுறவு உலகமயமாதலைஎப்படி நோக்கவேண்டும், உலக மயப்படுத்தப்பட்ட பொருளாதார அமைப்பில் கூட்டுறவின் பங்களிப்பை மக்கள் எவ்வாறு எதிர்பார்க்கின்றார்கள் என்றுவினாக்கள் இங்கு எழுகின்றன.

கூட்டுறவு உலகமயமாக்கலை அதனோடு கூடிய அச்சுறுத்தல், வாய்ப்புக்கள் என்பவற்றோடு இன்றைய யதார்த்தமாக ஏற்றுக் கொண்டு அதற்கு ஏற்றவகையில் கூட்டுறவின் அடையாளத்தை இழந்துவிடாது வினைத்திறனாக இயங்கக் கூடிய வழிவகைகளை வகுத்துக்கொள்வதே பொருத்தமான தந்திரோபாயமாகும். சிலர் கூட்டுறவு இலாப நோக்கினால் உந்தப்பட்டதல்ல. அவற்றின் குறிக்கோள்கள் உலகளாவியதாக இல்லாமல் உள்ளூர் மட்டத்திலேயே காணப்படுகிறது இதனால் தற்போதைய போட்டியடிப்படையிலான சுதந்திரமான பொருளாதார அமைப்பிற்கு பொருத்தமற்றது என்று கருதுகின்றார்கள், ஆனால் உண்மையாக கூட்டுறவுக்கு நிறைய சந்தர்ப்பம் உண்டு. ஏனெனில் அவற்றிற்கென்று ஒரு விசேடமான அடையாளம் உண்டு. சமூக அடிப்படையானவை மக்கள் மயப்பட்டவை. மிகச் சிறந்த வலைப்பின்னல் அமைப்பைக் கொண்டிருக்கின்றன. ஆதலால் கூட்டுறவு அவற்றின் தத்துவங்களை உண்மையாக விளங்குவதன்மூலம் உலகமயமாதலுக்கு ஏற்ற வண்ணம் உள்ளூர் அடிப்படையிலான பொருத்தமான பங்களிப்பினைச் செய்ய முடியும்.

இந்தப் பங்கினை வகிப்பதற்குக் கூட்டுறவு பின்வரும் எட்டு அம்சங்களில் கவனம் செலுத்தவேண்டும்.

1. கூட்டுறவு அடையாளத்தை பலப்படுத்தல் :-

கூட்டுறவின் அடிப்படைத் தத்துவமான பரஸ்பரம் ஒன்று சேர்ந்து வாழ்தல் என்பதற்கே இன்று ஆபத்து வந்துள்ளது இதற்குக் காரணம் அறியாமையும் கல்வியறிவின்மையுமேயாகும். அங்கத்தவர்களிடையே கல்வி அறிவு குறைந்து வருவதுடன் பரஸ்பரம் உதவுதல், ஒன்று சேர்ந்து வாழ்தல் என்பவற்றின் நன்மைகள் உலகளாவிய ரீதியில் நன்கு விளங்கிக் கொள்ளப்படவில்லை. இந்தப் பெறுமானங்கள் சந்தைச் சக்திகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்பதில் சந்தேகமில்லை. இதனால் கூட்டுறவு இயக்கம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கத்தவர்கள், தலைவர்கள், பணியாளர்கள் மத்தியில் வெற்றிகரமான கல்வித்திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் கூட்டுறவின் அடையாளத்தை மீண்டும் பதிக்கலாம்.

2. அங்கத்தவர்களுக்கான சேவைகளைப்பலப்படுத்தல்:-

ஒரு கூட்டுறவிலே அங்கத்வர்களுக்கும் அவ்வமைப்பிற்கும் இடையிலான தொடர்பின் முதுகெலும்பாக விளங்குவது அக்கூட்டுறவு அங்கத்தவர்களுக்கு வழங்கும் சேவையின் தரமாகும் அதிகரித்துவரும்போட்டிச் சந்தையில் கூட்டுறவு பிழைக்க வேண்டுமானால் அங்கத்தவர்களின் தேவையை அறிந்து அவர்களுக்கு வழங்கும் சேவைகளைப் பலப்படுத்த வேண்டும். இதற்குச் சிறந்த கூட்டுறவுத்தொழில் முயற்சிகள் அவசியமாகும். அங்கத்தவர்கள் தமது சமூக பொருளாதார தேவைகளுக்குப் பல புதியதும் நவீனமானதுமான சேவைகள் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் வழங்கப்படல் வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள் இதற்கு உகந்த தலைமைத்துவமும் முகாமையும் அவசியம் தேவைப்படுகின்றது.

3. ஆண், பெண் சமத்துவத்தை முன்னேற்றல் :-

பெண்கள் கூட்டுறவுக்குப் பயன்படுத்தப்படாத ஒரு மிகப் பெரிய வளமாகும். அவர்கள் உற்பத்தியாளர்கள். நுகர்வோர்கள், முகாமையாளர்கள் தலைவர்கள் சுறுசுறுப்பாக

( 9-ம் பக்கம் பார்க்க )

# கூட்டுறவு இயக்கம் பொருளாதார முயற்சி என்ற வகையில் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள்

கூட்டுறவுப் பெரியார் -
அமரர் வி. வீரசிங்கம் அவர்களின்
38 - வது நினைவு தினத்தை ஒட்டிய கட்டுரைப் போட்டியில் மத்திய பிரிவில் 1-ம் இடத்தைப் பெற்ற கட்டுரை இங்கு பிரசுரமாகியுள்ளது

'மக்கள் தங்களின் பொதுப் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு மனிதர்கள் என்ற ரீதியில் எவ்வித கட்டாயமுமின்றி சமத்துவ அடிப்படையுடன் ஜனநாயக முறையில் ஒன்றிணைந்து இயங்கும் முறையே கூட்டுறவு' என்று கல்வெர்ட் எனும் அறிஞர் கூறியுள்ளார். கூட்டுறவு இயக்கத்திற்கு பல்வேறு அறிஞர்கள் வரைவிலக்கணம் கூறியிருந்த போதும் கல்வெர்ட் எனும் அறிஞர் கூறிய இக்கருத்தே மிகப் பொருத்தமானதாகும். இக் கருத்தின் அடிப்படையில் கூட்டுறவு இயக்கமானது சுயவிருப்பத்துடனும், சுயாதீனமாகவும் ஒன்றிணைந்த நபர்கள் தமது பொதுப் பொருளாதார சமூக மற்றும் கலாச்சாரத் தேவைகளையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கில் ஜனநாயக ரீதியில் கூட்டான உரிமைகளுடன் நிர்வகிக்கப்படும் அமைப்பாக கூட்டுறவு இருப்பதால், அது தனது பொருளாதார

யானவர்களாகவும் இருக்கவேண்டும். அப்போது தான் அந்நிறுவனம் சகல விதமான பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து நிறுவனத்தை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்ல முடியும்,

இன்று உலகநாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் திறந்த பொருளாதாரக் கொள்கைகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து. அதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற சவால்களை எதிர் கொண்டு கூட்டுறவு நிறுவனங்களை பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பினைக் கூட்டுறவாளர்கள் கொண்டுள்ளார்கள்.


வா. தர்மிஷா
ஆண்டு - 10
யா / தெல்லிப்பழை யூனியன் கல்லூரி


இன்றைய உலகின் சூழ்நிலைகளுக்கேற்ப தமக்குரிய வளங்களைக் கொண்டு பொருளாதார நிலைகளை வளம்படுத்திக் கொள்வதில் கூட்டுறவு

அவசியமாகும் நவீன தொழில்நுட்ப முறைகளுக்கேற்ப இயந்திர சாதனங்களை உட்புகுத்தாது இருப்பது கூட்டுறவுத் துறையின் முன்னேற்றத்திற்கு பாரிய தடைக்கற்களாக உள்ளது.

தகவல் தொழில் நுட்ப துறையினால் இன்று உலகம் வளர்ச்சி அடைந்து வரும் இக் கால கட்டத்தில் கூட்டுறவுத் துறையினரைச் சார்ந்த ஊழியர்களதும், அவர்களுடைய சமூகத்தினரிடையே கல்வியில் எவ்விதமான முன்னேற்றத்தையும் காண முடியாது உள்ளது ஆனால் தனியார் துறையினரைப் பொறுத்தளவில் அவர்கள் இயன்றளவு தகவல் தொழில் நுட்பங்களை உட்புகுத்தி தொழிலாளர் சமூகத்ினரது கல்வி முன்னேற்றத்தை மேல் உயர்த்துகின்றனர். இவ்வாறு இலகுவான பொருளாதார வளங்களைப் பெற்றுக் கொள்வதில் கூட்டுறவுத் துறையினர் பாரிய தடைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இன்றைய தனியார் துறையினரையும், கூட்டுறவுத் துறையினரையும் ஒப்பு நோக்குகின்ற போது, கூட்டுறவுத் துறையினர் நவீன தொழில் நுட்ப வசதிகளில் பின்னடைவை எதிர் நாக்கியுள்ளதும் நவீன இயந்திர சாதனங்களை உட்புகுத்தி

## தற்போதைய......

( 7-ம் பக்க தொடர்ச்சி )

உழைப்பவர்கள். ஆனால் அவர்களுக்கு அநேகமாகச் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை. உலகமயமாதவினால் உருவாக்கப்படும் சமமின்மைக்கு உள்ளூரில் விடைகாண உண்மையாகவே கூட்டுறவு விருப்புமானால் ஆண், பெண் சமத்துவம் மிகவும் முக்கியமான அம்சமாகும். தலைமைத்துவப் பயிற்சிகள் பெண்களிடத்தில் அதிகாரமளிக்கும் நடவடிக்கைகள், எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்களைச் சமத்துவத்தை முன்னேற்ற வேண்டியதன் அவசியத்தை உணரப் பண்ணல் மிகவும் அவசரமாகத் தேவைப்படுகின்ற விடயமாகும்.

> இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம் நடத்திய வியாபார முகாமை டிப்புளோமா பயிற்சியாளர் ஒருங்கிணைப்புக் குழுவினால் வெளியிடப்பட்ட ''முனைவு மலர்'' சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை இங்கு மறுபிரசுரமாகியுள்ளது.

### 4. வர்த்தக உறவுகளை நிலைநாட்டல்:-

தற்போது மிகவும் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற கூட்டுறவின் மிகப் பெரிய சொத்து அதனுடைய நிலைக்குத்தானதும் கிடையானதுமான வலைப்பின்னல் அமைப்பாகும். இந்த வலைப்பின்னல் தேசிய மட்டத்தில் இருந்து சர்வதேச மட்டம்வரை காணப்படுகின்றது பங்காளர்களுடன் தந்திரோபாய உறவுகளை பலப்படுத்திக்கொள்வது இன்றைய சூழ்நிலையில் வெற்றிக்கு மிகவும் அவசியமானதொன்றாகும். அயல் நாடுகளுடன் சர்வதேச மட்டத்தில் வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்துதல் அவசியம். வளர்ந்த நாடுகளில் தமது நுகர்வோர் சந்தையில் உள்ள பங்கினைப் பேணிப் பாதுகாக்க ஒருங்கிணையவும் முன் வந்துள்ளனர். பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டியிடுவதற்கு இத்தகைய கூட்டுக்கள் அவசியம என்றுகருதிநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 5. இலத்திரனியல் வர்த்தகத்தை முன்னேற்றுதல் :-

தற்போது அநேகமான உற்பத்திகளுக்கு மரபு சார்ந்த சந்தைப்படுத்தல் முறைக்குப் பக்கபலமாக இலத்திரனியல் சந்தைப்படுத்தல் அமைந்துள்ளது. கூட்டுறவுத்துறையும் தங்களது பொருட்களைச் சந்தைப்படுத்த இணையத்தினைப் பயன் படுத்தத் தொடங்கியுள்ளன. பல வளர்முக நாடுகளிலும் இந்த முறை பின்பற்றப்பட்டுள்ளது கூட்டுறவுத் துறைக்கென ஒரு முதல் தர அதிகார வரம்பு ( domain ) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கூட்டுறவுத்துறை தமது அடையாளத்தை நிலைநாட்ட முடியும். அத்துடன் உலகளாவிய ரீதியில் சந்தைப்படுத்தல் சாத்தியமாகின்றது. உதாரணமாக தற்போது இலங்கை வாழ் தமிழ் மக்கள் உலக நாடுகள் எங்கும் பரந்து வாழ்கின்றனர். அவர்கள் தமது சொந்த ஊர்களில் உள்ள பொருட்களை நுகர்வதற்காக ஏங்கித் தவிக்கின்றனர். இவர்களிடத்தில் உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல் இணையம் பெரிதும் உதவும்.

### 6. சமூக கூட்டுக்கள் :-

கூட்டுறவுத் துறை உலகிலேயே மிகநீண்டகாலமாக நிலைத்து நிற்கும் ஒரு சமூக அமைப்பாகும். ஆனால் மேலும் தனித்து நின்று தப்பிப்பிழைப்பது கடினம். எனவே சமூக அமைப்பில் உள்ள ஏனைய நிறுவனங்களோடு தொடர்புகளை வளர்த்து உறவுகளைக் கட்டி எழுப்பவேண்டும். தொழிலாளர் அமைப்புகள், ஊழியர் சங்கங்கள், அரச சார்பில்லா நிறுவனங்கள், மக்கள் அமைப்புக்கள், பெண்கள் இயக்கங்கள் என்பவற்றை இங்கு குறிப்பிடலாம். இவற்றுள் பெரும்பான்மையானவற்றுடன் கூட்டுக்களை மேற்கொண்டால் இரு சாராரினதும் நலன்களுக்காக குரல் கொடுக்க முடியும். ஓரளவிற்கு இத்தகைய அமைப்புக்களில் பொதுவான குறிக்கோள் காணப்படும். இவற்றை கட்டியெழுப்ப உதவியாக இருக்கும்.

### 7. பெயரைக் கட்டியெழுப்பல் :-

கூட்டுறவைப் பற்றி எழுந்துள்ள தப்பபிப்பிராயங்களைக் களைந்து நற்பெயரை உருவாக்குதல் இன்றைய தேவையாக உள்ளது. கூட்டுறவு சார்ந்த சர்வதேச அமைப்பு (ICA) தனது வேலைத் திட்டத்தில் கூட்டுறவின் பெயரைக் கட்டியெழுப்புவதையும் அடையாளத்தை நிலைநாட்டுவதையும் மையமாகக்கொண்டு வேலைத் திட்டமொன்றை உருவாக்கியுள்ளது. சர்வதேச மட்டத்தில் ஏற்படும் இந்த மாற்றம் கூட்டுறவின் வலைப்பின்னல் அமைப்பின் ஊடாக உள்ளூர் மட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். தற்கால விரைவான தகவல் பரிமாற்றம், தொலைத்தொடர்பு ஊடகங்களின் மூலம் இத்தாக்கம் விரைவாகவே உணரப்படலாம் கூட்டுறவு பற்றிய தப்பான அபிபயிராயம், நிதிதிரட்டல், அங்கத்தவர்களைச் சேர்த்தல், அங்கத்தவர்களைப் பேணுதல், வளர்ச்சி என்பவற்றிற்கும் பாதகமாக அமையும். உலகலாவிய வலைப்பின்னலைக் கொண்ட கூட்டுறவு தனது வியாபாரத்தைப் பெருக்க நற்பெயரைக் கட்டியெழுப்பவேண்டும்.

### 8. பொருத்தமான சட்ட ஒழுங்குச் சூழலுக்காக ஆதரவைத் திரட்டல் ;-

கூட்டுறவு விருத்திக்கான சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியதும் அவசியமாகும். அங்கத்தவர்களுக்குச் சேவையாற்றும் கூட்டுறவு நிறுவனம் பல சந்தர்ப்பங்களில் அரச தலையீடு, சட்டம், ஒழுங்கு என்பவற்றின் சிக்கல்கள் பொருத்தமற்ற கணக்குப்பரிசோதனை முறை என்பவற்றால் பாதிக்கப்படுகிறது. கூட்டுறவுத் தத்துவத்திற்கு உகந்த வகையில் எளிமையானதும் இலகுவானதுமான செயற்திறன் மிக்க புதிய வழிமுறைகளையும் பொருத்த சட்ட திட்டங்களையும் அரசாங்கத்துடன் இணைந்த வகையில் செயல்பட்டு அறிமுகப்படுத்துவதன் மூலம் கூட்டுறவுத்துறை செழித்து வளர வாய்ப்புண்டு.

மேற்கூறிய விடயங்களுக்கு அதிக கவனம் செலுத்தி கூட்டுறவுத் துறையை சீரமைத்தால் இன்றைய போட்டிச் சூழ்நிலையிலும் உலகமயமாதலின் வளர்ச்சியிலும் சிக்கித் தவிக்கின்ற நலிந்தவர்களுக்கு கூட்டுறவுத்துறை நன்மைகள் செய்யும். அதே வேளை தானும் செழித்து வளர்ந்து நீடூழி வாழ முடியும்.

# இலக்கிய ஆர்வலர் சந்திப்பு :

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்க கலாசார கூட்டுறவுப் பெருமன்றத்தின் ஏற்பாட்டில் இலக்கிய ஆர்வலர் சந்திப்பு 01 - 12 - 02ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு மேற்படி மன்றத் தலைவரும் கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத் தலைவருமாகிய திரு. த. சிதம்பரம்பிள்ளை அவர்கள் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி சந்திப்பில் தலைவர் அவர்கள் தமது தலைமை உரையின் போது இத்தகைய இலக்கிய சந்திப்புக்கள் ஆரோக்கியமாக இலக்கிய வளர்ச்சிக்கும் சமூகமேம்பாட்டிற்கும் ஏதுவாக அமைகின்றது எனக் குறிப்பிட்டார்.

பிரபல படைப்பாளரும், இலக்கிய விமர்சகரும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவருமாகிய கலாநிதி, செ. யோகராசா அவர்கள் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான பல கருத்துக்களை வழங்கிச் சிறப்பித்துள்ளார் அவர் தமது உரையில் 'படைப்பும் பிரதிபலிப்பும்' என்ற பொருளில் கருத்துரை வழங்கினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாமணி அவர்கள் கருத்துரை வழங்குகையில் இலக்கிய படைப்புக்கள் மனிதவாழ்வில்புடல் அழகியல் கலந்ததாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நெ. ம. ம. வித்தியாலய அதிபர் திரு. சேதுராசா அவர்கள் நவீன இலக்கியங்கள் இன்னமும் மக்கள் மத்தியில் செறிவடையவில்லை எனத் தெரிவித்தார். கூட்டுறவுப் பெருமன்ற உபதலைவர் திரு. செ. சதானந்தன் தனது கருத்துரையில் பல இலக்கியப் படைப்புக்கள் வெளிவந்தபோதும் போதியளவு சமூக மாற்றங்களை ஏற்படுத்தவில்லை எனத் தெரிவித்தார்.

சமூக மகளிர் குழுத் தலைவி திருமதி. வ. பத்தினிப்பிள்ளை, ஆசிரியை கல்யாணி ஆகியோர் உட்பட பலர் கருத்துரை வழங்கினார்கள். கல்வி உத்தியோகத்தர் திரு. கே. காந்திமதிநாதன் நன்றி உரை கூறினார்.

## புதிய இயக்குநர் சபை

புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபைத் தலைவராக திரு. ப. கனகலிங்கம் உபதலைவராக திரு. க. இராஜரெத்ணமும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

மற்றும் இயக்குநர் சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் சு. கு. சண்முகலிங்கம் ந. தில்லைநாதன், சி. கணேஷ் ஆகியோருடன் முப்பத்தைந்து வயதுக்குட்பட்ட கெ. றஞ்சிதன், க. பகீரதன் ஆகிய இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

நயினாதீவுப் பகுதியில் இருந்து திரு. ஐ. சாம்பசிவம், திரு. செ. கந்தசாமி ஆகிய இருவரும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

---

ஊறுகாய், கருவாடு, அப்பளம் இவற்றை தவிருங்கள்.

களையும் கட்டுப்படுத்துங்கள். இவ்வாறும்பையில் உள்ளலீலாவதி மருத்துவமனையைச் சேர்ந்த நரம்பியல்

**கூட்டுறவுக் கொள்கைகள் ;**

1. தன் விருப்பார்ந்த தடையற்ற (திறந்த) உறுப்புரிமை.
2. ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிர்வாகமும்.
3. அங்கத்தவர்களின் பொருளாதா

## கூட்டுறவாளர் . . . . .

( 2-ம் பக்கத் தொடர்ச்சி )

கூட்டறவு என்றால் என்ன? என்று வினா எழும்பும் போது பல்வேறு கூட்டுறவாளர்கள் பல்வேறு விளக்கங்களைக் கூறுவார்கள் அவற்றிலும் மேலாக இவரது விளக்கங்கள் மிகச் சிறந்தவை என கூட்டுறவாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கூட்டுறவு என்ற சொல்வலிமை வாய்ந்த சொல்லாலும் கூட்டுறவு என்றால் ஒவ்வொரு மனிதனும் வேற்றுமையின்றி, ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழும் மனப்பாங்கில் இந்தக் கூட்டுறவு வளருகிறது என்று பல காரணங்கள் விளக்கங்கள் எடுத்துக் கூறி நிரூபித்தார்.

ஒவ்வொரு சுதந்திரக் கூட்டுறவாளனும் அரசுக்கோ அதிகாரிகளுக்கோ, சட்டதிட்டங்களுக்கோ பயப்படாது சரியைச் சரியென்றும் பிழையைப் பிழையென்றும் கூறக்கூடிய துணிவு இருந்தால் தான் அவர்கள் சுதந்திரக் கூட்டுறவாளர்கள்.

பெரியார் வீரசிங்கம் ஒரு சுதந்திரக் கூட்டுறவாளர், சிலருக்கு அரசின்மேல் வெறுப்பு இல்லை ஆனால் அரசுதான் இவரை ஒதுக்கி விட்டது என்றும் நூல்களில் குறிப்பிடப்படுகிறது சிலவேளைகளில் அரசு இவரின் பக்கம் வந்ததுமுண்டு.

கூட்டுறவுக் கல்வியை கூட்டுறவாளர்களுக்கு போதிப்பதன் மூலம்தான் பலஉயர்வுகள் கிடைக்கும் என நம்பினார், பின்னர் அப்படியே செய்து விட்டார். இதனை பின்வந்த கூட்டுறவாளர்களும், அவரது காலக் கூட்டுறவாளர்களும் இது முற்றிலும் மிகத் திறமையனது என்று ஒப்புக் கொண்டனர்.

கூட்டுறவாளரின் கடமைகள் வேறு, கூட்டுறவு 'அங்கத்தவர்களின் கடமைகள் வேறு, கூட்டுறவுப் பணியாளர்களின் கடமைகள் வேறு ஆகவே அவரவர் தத்தம் கடமைகளைச் செய்வது தவிர பிறர் கடமைகளில் தலையிடக் கூடாது என்று கூட்டுறவாளர்சுளுக்கு வலியுறுத்தினார்.

மேலும் கூட்டுறவு ஒரு புனிதமான இயக்கம், தனித்தன்மை கொண்டது. இதை எக்காரணங்கொண்டும் கெடுத்துவிடக் கூடாது என்று இவரது போதனைகளுள் ஒன்று. பெரியார் வீரசிங்கம் கூட்டுறவாளர் இதயத்தில் மட்டுமல்ல தமிழ் மக்களிடையே ரு தனி இடத்தை வகிக்கின்றார்.

இவர் ஒரு சிந்தனையாளர் யாழ் மக்களின் பாதுகாவலன் என்றும் பலர் போற்றுகின்றனர் இவர் ஒரு தெய்வம் இவர் பூசிக்கப்பட வேண்டியவர் இவர் யாழ்ப்பாணத் தமிழ்க் கூட்டுறவின் மாமனிதர் இன்றைய கூட்டுறவாளர்களின் உயர்ந்த மாமனிதர்,

கூட்டுறவு வளர்ச்சிக்கு நேர்மை, உண்மை, சேவை, ஒழுங்கு என்பன முக்கியம் என்று கூட்டுறவாளர்களுக்கு விளக்கினார் கூட்டுறவாளர்கள் கூட்டுறவுக்கு எந்தநேரமும் அரசினால் அல்லது வேறு எந்த வகையினாலும் குந்தகம் விளைவிக்கும் வகையில் எந்த நேரமும் ஏதாவது நடக்கும் என்று கூட்டுறவாளர்களுக்கு வலியுறுத்திலார்.

இதற்கு கூட்டுறவாளர்கள் தயார் நிலையில் இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார் ஆகவே பெரியர் வீரசிங்கம் கூட்டுறவாளர் இதயத்தில் ஒருவித்து அது மரமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. கூட்டுறவாளருடன், கூட்டுறவும், மக்களுடன் கூட்டுறவும் இருக்கு மட்டும் வீரசிங்கம் வேரூன்றியிருப்பார் என்பது திண்ணம்

வாழ்க கூட்டுறவு !
வாழ்க பெரியார் வீரசிங்கம் !

## உருளைக்கிழங்கு....

( 4-ம் பக்கத் தொடர்ச்சி )

நோய் தாக்கும் காலங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளும் முறையைப் பயன்படுத்தியும் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியும். அதாவது இம்முறையின் மூலம் நோய்த் தாக்கம் குறைவான காலங்களில் பயிர் செய்வதனால் பயிரைப் பாதுகாத்துக் கொள்ளலாம். உதாரணமாக நுவரெலியாப் பிரதேசத்தின் சீதோஷ்ண நிலை, எந்தவொரு காலத்திலும் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கைக்கு உகந்ததாக இருப்பினும், மே தொடக்கம் செப்ரெம்பர் வரையான காலத்தில் அதாவது தென் மேற்குப் பருவப் பெயர்ச்சி மழை பெய்யும் காலப்பகுதியில் இந்நோயின் தாக்கம் அதிகமாக இருக்கும். எனவே, இப்பிரதேசங்களில் ஒக்ரோபர் முதல் ஏப்ரல் வரையுள்ள காலப்பகுதியில் இந்நோயின் தாக்கம் மிகக் குறைவாக இருக்கும். அதேபோல் வட கிழக்கு பருவப் பெயர்ச்சி மழை பெறும் பிரதேசங்களில் ஜனவரி தொடக்கம் ஜூலை வரையுள்ள காலப்பகுதியில் செய்கை பண்ணப்படும் உருளைக் கிழங்குப் பயிர் இந்நோயின் தாக்கத்தில் இருந்து தப்பித்துக்கொள்கிறது.

இந்நோயின் தாக்கம் குறைவாகக் காணப்படும் பிரதேசங்களான பதுளை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் தொடுகைப் பங்கசு நாசினிகளான மங்கோசெப், மனெப், புறம்பினெப் அல்லது குளோரோதல ரோனில் போன்றவற்றை விசிறுவதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். எனினும் நுவரெலியா போன்ற ஈரப்பதன் கூடிய பிரதேசங்களில் மேற்கூறிய தொடுகைப் பங்கசு நாசினிகளுக்கு மேலதிகமாக ஒன்று அல்லது இரண்டு முறை உறிஞ்சப்படும் பங்கசு நாசினிகளின் விசிறல்களும் அவசியமாகின்றது. அதே வேளையில் சரியான நேரத்தில் சரியான முறையில் அதாவது இலையின் மேல் கீழ்ப்பரப்புகள் நன்றாக நனையும் படி விசிறுவதன் மூலமும் இந்நோயைச் சிறப்பான முறையில் கட்டுப்படுத்த முடியும்.

## கனவுகள் . . .

நாடகம் (2-ம் பக்கத் தொடர்ச்சி)

**கனவுகள் கலைந்த போது ..**

பார்வதி - சுஜிர்தா கணபதிப்பிள்ளை
(மூத்த மகன்) சிவா - லாவண்யா ஸ்ரீச்சந்திரன்
(2வது மகன்) பாலா - துளசி குகராசா
(3வது மகன்) கண்ணன் - சாந்தரூபி இராமநாதன்
(தங்கை) பஞ்சு - தர்சனா குலசிங்கம்
(மச்சாள்) பிரியா - சஜந்தினி சந்தசாமி
(வழிப்போக்கன்) சுப்பு - சிவப்பிரியா இராஜதுரை
( ,, ) மணியம் - சுஜந்தா பாலசிங்கம்
(கண்ணனின் காதலி) ஜலயா - தேவி காசிநாதன்
அனுமந் - றஜிதா இராஜராஜேஸ்வரன்
பர்வதம் (அனுமந்தின் அம்மா) - ஜனார்த்தனா மயில்வாகனம்
கனகம்மா - துளசி குகராசா
நாடக நெறியாள்கை: லாவணயா, ஸ்ரீச்சந்திரன்

- மல்லைமகள்

Registered as a News paper at the G. P. O
SriLanka Under / No K. V. J. 59 / 87 ஐக்கியதீபம் மார்கழி, தை - 2003

## யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு . . . .

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

கூட்டுறவு அமைப்புகள் நன்கு வளர்ச்சி அடைய வேண்டிய இடங்கள் கிராமப் புறங்களே அமரர் வீரஸிங்கம் அவர்களைப் பொறுத்தளவில் அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் குடாநாட்டின் விவசாயத்துறையிலும், கைத்தொழிற் துறையிலும், மீன்பிடித்துறையிலும் அபரிதமான வளர்ச்சி அடைந்துள்ளதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது என்று கூறினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அமரர் வீரசிங்கம் நினைவு தினப் பேருரை நிகழ்த்துகையில் கூறியதாவது;

கூட்டுறவு இயக்கத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்த அமரர் வீரசிங்கம், இந்நாட்டில் கூட்டுறவு வளர வேண்டும், கூட்டுறவால் நாட்டின் ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டும். என்ற பெரு நோக்குடன் வாழ்ந்து காட்டியவர் தான் அமரர் வீரசிங்கம் என்று குறிப்பிட்டார்.

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் இலங்கையின் கூட்டுறவுத் துறை வளர்ச்சிக்கு, குறிப்பாக வட பகுதி கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கு ஒரு வித்தாக இருந்து அதனை மாபெரும் விருட்சமாக்குவதற்கு தன்னையே அர்ப்பணம் செய்து கொண்டார். அவர் நாமத்தைக் கொண்ட இம் மண்டபம் எத்தனையோ பெருமைக்குரிய நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 1 வது பட்டமளிப்பு விழாவும் இந்த மண்டபத்தில் தான் நடைபெற்றது.

கூட்டுறவு பெரியார் அமரர் வீரசிங்கத்தின் நினைவு தினத்தைக் கூட்டுறவாளர்கள் வருடா வருடம் பாராட்டக்கூடிய அம்சமாகும்.

கூட்டுறவுத்துறையில் பல பெரியார்கள் ஈடுபட்டு சேவை செய்திருக்கலாம். ஆனால் வீரசிங்கம் போன்றவர்களின் நினைவு தினத்தை மட்டும் தான் கூட்டுறவாளர்கள் கொண்டாடுகிறார்கள். இது அமரர் வீரசிங்கம் அவர்களின் தன்னலமற்ற கூட்டுறவுச் சேவையினை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. என்று பேராசிரியர் அ. சண்முகதாஸ் தனது உரையில் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி பேசுகையில் கூறியதாவது;

இலங்கையின் கூட்டுறவு இயக்க வரலாற்றில் குறிப்பாக வட பகுதியில் கூட்டுறவு இயக்கத்தை கட்டி எழுப்பியவர் பெரியார் அமரர் வீரசிங்கம் இவரது தன்னலமற்ற கூட்டுறவுச் சேவையை பின்பற்றி இன்றைய கூட்டுறவாளர்கள் தமது கூட்டுறவுச் சேவையைப் பின்பற்றி வருகிறார்கள்.

இன்றைய சூழ்நிலையில் கூட்டுறவுத்துறை, தனியார் துறையுடன் போட்டி இட்டு தமது வியாபார நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியுள்ளது. இந் நிலையில் போட்டிப் பொருளாதாரத்தில் கூட்டுறவுத் துறை மிகவும் கஷ்டமான முறையிலேயே தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது என்றார்.

இவ்விழாவில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் திரு செ. கனகசபாபதி (அபிவிருத்தி) திரு சு. கணேசமூர்த்தி (ப. தெ. வ) திரு. பி. சிவலிங்கம் (எண்பார்வை) மக்கள் வங்கியின் வடபிராந்திய பொது முகாமையாளர் எஸ் சிவபாதவிருதையர் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் வரவேற்புரை கூறினார்.

அமரர் வீரசிங்கம் நினைவு தினத்தை ஒட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் பயிற்சியாளர்களின் கனவுகள் கலந்த போது என்னும் நாடகமும் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன

## கூட்டுறவு ...

( 8-ம் பக்கத் தொடர்ச்சி )

இன்று வர்த்தக இலாப நோக்குடன் கூட்டுறவுத் துறையை நோக்குகிறார்களே தவிர கூட்டுறவுத் துறையின் உண்மைத் தத்துவத்தை அறிந்து செயற்படாது உள்ளமையால் இது பாரிய பிரச்சனையை எதிர் நோக்கியுள்ளது. இதனை மேலும் வலியுறுத்திக் கூறினால்; இன்றைய கூட்டுறவாளர்களில் உண்மையான, நேர்மையான, அதீத பற்றுடன் செயற்படக் கூடிய கூட்டுறவாளர்களைக்காண்பது மிகவும் அரிதாகவுள்ளது;

இன்றைய இளம் சமுதாயத்தினரிடையே கூட்டுறவு பற்றிய அறிவினைக் காண்பது மிக அரிதாக உள்ளது. எனவே, கூட்டுறவுக் கல்வியானது பாடசாலை மட்டத்திலே தான் சாத்தியமாகும். கூட்டுறவுக் சங்க மட்டத்தில் முப்பத்தைந்து வயதுக் குட்பட்ட இருவர் கிளைக் குழுவில் அங்கம் வகிக்கலாம் என்ற கூட்டுறவுச் சங்க உபவிதியில் கூறப்பட்ட போதும், இன்று இளம் சமுதாயத்தினரிடையே கூட்டுறவு பற்றிய அறிவு இல்லாமையினாலும் அவர்கள் கூட்டுறவுத் துறையில் அங்கம் வகித்து அதிருப்தியுடன் பணியாற்றுவதனாலும் அவர்களிடம் கூட்டுறவுப் பொறுப்பினைக் கையளிப்பதில் பின்நிற்பது ஒரு பாரிய பிரச்சனையாகும். இந்நிலை மாறிக் கூட்டுறவு இயக்கத்தில் முதியவர்கள் முதல் இளைய சமுதாயத்தினர் வரை பொறுப்பேற்க முன் வர வேண்டும்.

இன்று கூட்டுறவுத் துறையினர் காணப்படுகின்ற நிறுவன விசுவாசத் தன்மை, ஆளுமை, நேர்மை குறைவதும் அவர்களுக்கு வழங்க வேண்டிய வேதனங்கள், நல உரிமைகள் என்பவற்றில் காணப்படும் பாரபட்சமான தன்மையும் பாரிய பிரச்சினையாகக் காணப்பட்டு பொருளாதார முன்னேற்றத்தைத் தடுத்து கூட்டுறவின் அபிவிருத்தியையும் மழுங்கடிக்கின்றது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் 2ம் மாடியில் இயங்கும் யாழ். மா. கூ. சபையினரால் 2003ம் ஆண்டு மார்கழி, தை மாதம் வெளியிடப்பட்டது.